மாலை முரசு

பக்கங்கள் 20

முழக்கம்: 01 வள்ளுவ ஆண்டு 2054 கார்த்திகை 09 சனிக்கிழமை 25.11.2023 அதிர்வு 117

## இருவேறு பிரதேசங்களில் நீரில் மூழ்கி இருவர் மாயம்

இருவேறு பிரதேசங்களில் இருவர் நீரில் மூழ்கி காணாமல்போயுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அதன்படி மின்னேரியா குளத்திலிருந்து கந்தளே ஏரிக்கு நீர் செல்லும் கால்வாயில் நீராடச் சென்ற

04



### அலெக்ஸ் படுகொலை வழக்கில்

# நான்கு பொலிஸார் கைது; டிச. 4 வரை விளக்கமறியல்

### அநுராதபுரம் சிறையில் அடைப்பு




*(ந.லோகதயாளன், எஸ்.நிதர்ஷன்)*

யாழ்ப்பாணம் - வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையத்தில் சித்தங்கேணியைச் சேர்ந்த நாகராசா அலெக்ஸ் என்ற இளைஞர் பொலிஸாரின் கொடூர சித்திரவதைகளுக்குள்ளாகி உயிரிழந்த சம்பவம் தொடர்பில் நான்கு பொலிஸ் உத்தியோகத்தர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அவர்களை எதிர்வரும் 4ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்ட யாழ்ப்பாணம் நீதிவான், அன்றைய தினம் அடையாள அணிவகுப்புக்குத் தயார்ப் படுத்துமாறும் உரிய தரப்பினருக்குக் கட்டளையிட்டார்.

04

## கிளிநொச்சியில் நினைவேந்தலுக்கு எதிரான ஏழு வழக்குகளும் தள்ளுபடி

### சுமந்திரனின் அதிரடியான சட்ட வாதத்தையடுத்து

(ந.லோகதயாளன்)

மாவீரர் தின நினைவேந்தலைத் தடை செய்யுமாறு கோரி கிளிநொச்சி மாவட்டத்தின் 7 பொலிஸ் நிலையங்களாலும் தாக்கல் செய்யப்பட்டிருந்த வழக்குகள் இன்று கிளிநொச்சி மாவட்ட நீதிமன்றத்தால் நிராகரிக்கப் பட்டது.

04




## மன்னாரிலும் தடை கோரும் மனு பிசுபிசுப்பு

### நினைவேந்தலுக்கு நீதிமன்றம் அனுமதி

(மன்னார் நிருபர்)

மன்னார் ஆட்காட்டிவெளி மாவீரர் துயிலும் இல்லத்தில் எதிர்வரும் 27 ஆம் திகதி நடைபெறவுள்ள மாவீரர் நினைவேந்தலுக்கு எதிராகத் தடை

04

## மட்டு. வாகரை மாவீரர் துயிலும் இல்லத்தை அழித்து உடைத்துச் சேதப்படுத்திய விஷமிகள்

### சிவப்பு, மஞ்சள் கொடிகளும் அறுத்து எறிவு



(கனகராசா சரவணன்)

மட்டக்களப்பு, வாகரையிலுள்ள மாவீரர் துயிலும் இல்லத்தில் அமைக்கப்பட்டிருந்த மாவீரர்களின் நினைவுக் கல்வெட்டுக்களையும், கம்பி வேலி அமைக்கப்பட்டிருந்த கொங்கிறீட் தூண்களையும் இனந்தெரியாத நபர்கள் அடித்து உடைத்துச் சேதப்படுத்தியுள்ளனர். அத்துடன் சோடிக்கப்பட்டிருந்த கொடிகளையும் அறுத்து எறிந்துள்ளனர்.

இந்ச் சம்பவம் நேற்று இரவு இடம்பெற்றுள்ளது.

04

# அரச ஊழியருக்கென அதிகரிக்கப்பட்டுள்ள கொடுப்பனவில் ரூ.5 ஆயிரம் ஜனவரியில்!

வரவு – செலவுத் திட்டத்தில் அறிவிக்கப்பட்ட அரச ஊழியர்களுக்கு அதிகரிக்கப்பட்ட 10 ஆயிரம் ரூபா வாழ்க்கைச் செலவு கொடுப்பனவில் இருந்து 5 ஆயிரம் ரூபாவை ஜனவரி மாதம் முதல் வழங்க அரசு கவனம் செலுத்தியுள்ளது.

ஓய்வூதியர்களுக்கு அதிகரிக்கப்பட்ட 2 ஆயிரத்து 500 ரூபா கொடுப்பனவை ஜனவரி மாதம் முதல் முழுமையாக வழங்குவதற்கும் இணக்கம் வெளியிடப்பட்டுள்ளது.

வரவு – செலவுத் திட்டத்தில் அரச ஊழியர்களுக்கு 10 ஆயிரம் ரூபா வாழ்வாதாரச் செலவுக் கொடுப்பனவாக வழங்குவதற்கு உறுதியளிக்கப்பட்டது.

அதில் 5 ஆயிரம் ரூபாவை ஏப்ரல் மாதத்திலும் மீதித் தொகையை ஒக்ரோபர் மாதத்திலும் வழங்குவதற்கு அனுமதி வழங்கப்பட்டிருந்தது.

இந்த நிலையில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தலைமையில் இடம்பெற்ற கூட்டத்தில், எதிர்வரும் ஜனவரி மாதம் முதல் உரிய அரச ஊழியர்களின் சம்பள அதிகரிப்பில் ஒரு பகுதியை வழங்குவது குறித்தும், ஜனவரி மாதம் முதல் 5 ஆயிரம் ரூபாவும், ஏப்ரல் மாதம் முதல் முழுமையாகப் 10 ஆயிரம் ரூபாவை வழங்குவது குறித்தும் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

ஜனாதிபதி அலுவலகத்தின் அரச வருவாய் பிரிவின் 2003 ஆம் ஆண்டு எதிர்பார்க்கப்படும் நிதி நிலை அறிக்கையின் புள்ளி விவரங்களுக்கமைய, சம்பள அதிகரிப்பை ஜனவரி மாதம் முதல் நடைமுறைப்படுத்த முடியும் எனத் தெரியவந்துள்ளது.

# மோட்டார் சைக்கிள் – பிக்கப் விபத்து; வவுனியாவில் ஐவர் ஆஸ்பத்திரியில்!



மோட்டார் சைக்கிள் மீது தேங்காய் ஏற்றிச் சென்ற பிக்கப் ரக வாகனம் மோதி விபத்துக்குள்ளானதில் ஐவர் காயமடைந்த நிலையில் வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந்த விபத்து நேற்று(24) மாலை வவுனியா பொருளாதார மத்திய நிலையத்துக்கு முன்பாக இடம்பெற்றுள்ளது.

விபத்து தொடர்பாக மேலும் தெரிய வருகையில்,

நகரில் இருந்தது மூன்று முறிப்பு நோக்கி சென்ற பிக்கப் ரக வாகனம் முன்னே சென்ற மோட்டார் சைக்கிளின் மீது பின்பக்கமாக மோதி விபத்துக்குள்ளானது.

இந்த விபத்தில், மோட்டார் சைக்கிள் மற்றும் பிக்கப் ரக வாகனத்தில் பயணித்த ஐவர் காயமடைந்த நிலையில் வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந்த விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை வவுனியா பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## தோணிக்கல் இரட்டைக் கொலைச் சம்பவம்:

# தலைமறைவாகியிருந்த சந்தேக நபர்களில் ஒருவர் ஹொரவப்பொத்தானையில் கைது!

வவுனியா, தோணிக்கல் பகுதியில் இடம்பெற்ற இரட்டை கொலை சம்பவம் தொடர்பில் தேடப்பட்டு வந்த சந்தேக நபர்களில் ஒருவர் குற்றப்புலனாய்வு திணைக்கள அதிகாரிகளால் நேற்று (24) மாலை கைது செய்யப்பட்டுள்ளார்.

வவுனியா, தோணிக்கல் பகுதியில் கடந்த ஜூலை மாதம் 23 ஆம் திகதி அதிகாலை வீடு புகுந்து தாக்குதல் நடத்தி பெட்ரோல் ஊற்றி எரியூட்டப்பட்ட சம்பவத்தில் இருவர் மரணமடைந்திருந்தனர்.

இந்த இரட்டைக் கொலை சம்பவத்துடன் தொடர்புபட்ட ஆறு பேர் சந்தேகத்தில் கைது செய்யப்பட்டிருந்தனர். அவர்களிடம் குற்றப் புலனாய்வு திணைக்களத்தின் கொலை விசாரணைப் பிரிவினர் விசாரணைகளை முன்னெடுத்து



வந்தனர்.

இதன்போது, மேலும் மூன்று சந்தேக நபர்களுக்கு எதிராக சாட்சியங்கள் உறுதிப்படுத்தப்பட்டமையால் அவர்களைக் கைது செய்யக் குற்றப்புலனாய்வு திணைக்களத்தினர் நடவடிக்கை எடுத்திருந்தனர்.

அந்த மூவரும் தலைமறைவாக இருந்ததால் அவர்களது கடவுச்சீட்டுகள் நீதிமன்றத்தால் முடக்கப்பட்டிருந்தன. அவர்களை கைது செய்வதற்கான பிடியாணை உத்தரவு கடந்த செப்ரெம்பர் மாதம் 7 ஆம் திகதி வவுனியா நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்பட்டிருந்தது.

இந்த நிலையில், இது தொடர்பில் நடவடிக்கைகளை முன்னெடுத்து வந்த குற்றப்புலனாய்வு திணைக்களத்தின் கொலை விசாரணைப் பிரிவினர் சந்தேக நபர்களில் ஒருவர், ஹொரவப்பொத்தானை பகுதியில் மறைந்திருந்த நிலையில் அவரைக் கைது செய்துள்ளனர். அவரிடம் மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன.

வவுனியா, 4ஆம் கட்டைப் பகுதியைச் சேர்ந்த இளைஞர் ஒருவரே மறைந்திருந்த நிலையில் இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.





# பல்கலை மருத்துவ பீடத்துக்கு யாழ்.நகரில் எட்டு மாடிக் கட்டடம்!

## கிரகப் பிரவேச கிரியைகள் நிறைவு; விரைவில் திறப்பு!

யாழ். பல்கலைக்கழகத்தின் மருத்துவ பீடத்துக்காக யாழ். நகரில் புதிதாகக் கட்டப்பட்ட எட்டு மாடிகளைக் கொண்ட மருத்துவப் பிரிவு கட்டடம் உத்தியோக பூர்வமாக விரைவில் திறந்து வைக்கப்படவுள்ளது.

புதிய கட்டடத்துக்கான கிரகப் பிரவேச கிரியைகள் நேற்று முன்தினம் (23) வியாழக்கிழமை நடைபெற்றன. நேற்று வெள்ளிக்கிழமை (24) சமய முறைப்படி கட்டடத்தில் பால் காய்ச்சப்பட்டுப் படம் வைக்கப்பட்டது.

இதன்போது யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் சி.ஸ்ரீ சற்குணராஜா, பல்கலைக்கழக மருத்துவ பீட பீடாதிபதி, யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர், மருத்துவ பீடத்தின் கல்விப் பணியாளர்கள், ஆலோசகர்கள் உட்பட பல்வேறு முக்கியஸ்தர்கள் கலந்து கொண்டனர்.





# கூடுதலான விலைக்குச் சீனி விற்பனை; வர்த்தகர்களுக்கு எதிராக வழக்கு!

(அஸ்ஹர் இப்றாஹிம்)

அம்பாறை மாவட்டத்தில் உள்ள வர்த்தக நிலையங்களில் மேற்கொள் எப்பட்ட திடீர் சுற்றி வளைப்பின் போது நிர்ணயிக்கப்பட்ட விலையை விட கூடுதலான விலைக்குச் சீனி விற்பனை செய்த வர்த்தகர்களுக்கு எதிராக நீதி மன்றங்களில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டு வருகிறது.

பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையின் அம்பாறை மாவட்ட பொறுப்பதிகாரி எஸ்.என்.எம்.சாலிந்த பண்டார நவரெட்ன இந்தத் தகவலைத் தெரிவித்தார்.

பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையின் புலனாய்வு உத்தியோஸ்தர்கள் மாவட்டத்திலுள்ள சகல வர்த்தக நிலையங்களிலும் திடீர் சோதனைகளை தொடர்ச்சியாக மேற்கொண்டு வருகின்றனர்.



சுற்றிவளைப்பின் போது நிர்ணயிக்கப்பட்ட விலையை விட கூடுதலான விலைக்கு சீனி விற்பனை செய்த வர்த்தகர்கள் கைது செய்யப்பட்டும் வருகின்றனர்.

அத்தியாவசியமான உணவுப் பொருள்களின் விலைகள் குறைக்கப்பட்டிருந்த போதிலும், சில வர்த்தக நிலையங்களில் கூடுதலான விலைக்கு அவை விற்பனை செய்யப்படுகின்றன என்று பொது மக்களிடம் இருந்து முறைப்பாடுகள் கிடைத்து வருகின்றன.

அத்தியாவசியப் பொருள்களைப் பதுக்கிவைத்துச் சந்தையில் தட்டுப்பாடு நிலவுவதாகத் தெரிவித்தல், நுகர்வோர் பார்வைக்காக வர்த்தக நிலையங்களில் விலைப்பட்டியல் காட்சிப்படுத்தப்படாமை, கட்டுப்பாட்டு விலையை விட கூடுதலான விலைக்கு விற்றல், நுகர்வோருக்கு பொருத்தமில்லாத காலாவதியான பொருள்களை விற்பனை செய்தல் என்பன சட்டத்துக்கு முரணான குற்றச் செயல்களாகும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

## இரு வேறு பிரதேசங்களில்...

37 வயதான அத்துரலிய, யஹல முல்ல பிரதேசத்தைச் சேர்ந்த நபர் காணாமல்போயுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பொலிஸார் மற்றும் பிரதேச மக்கள் இணைந்து காணாமல்போனவரைத் தேடும் பணியில் ஈடுபட்டுள்ளனர்.

இதேவேளை, வக்கமுல்ல, வீர கெடிய, ஊருபோகுஓயே அணையின் மீது நடந்து சென்ற 40 வயதுடைய நபர் ஒருவர் நீரில் அடித்துச் செல்லப்பட்டு காணாமல்போயுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இவர் வக்கமுல்ல, ஹகுருவெல பிரதேசத்தைச் சேர்ந்தவர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், காணாமல்போன இருவரையும் தேடும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

## மன்னாரிலும்...

உத்தரவைப் பிறப்பிக்கக் கோரி அடம்பன் பொலிஸார் மன்னார் நீதிமன்றத்தில் இன்று மனுவொன்றைத் தாக்கல் செய்தனர். எனினும், உயிரிழந்த உறவுகளை நினைவுகூர மன்னார் நீதிவான் நீதிமன்றம் அனுமதி வழங்கியுள்ளது என்று சட்டத்தரணி எஸ். டினேசன் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறுகையில்,

"மன்னார், மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள அடம்பன் பிரதேசத்தில் அமைந்துள்ள ஆட்காட்டி வெளி மாவீரர் துயிலும் இல்லத்தில் எதிர்வரும் 27 ஆம் திகதி நடைபெறவுள்ள உயிர் நீத்தவர்களுக்கான நினைவேந்தலுக்கு எதிராகத் தடை உத்தரவைப் பிறப்பிக்கக் கோரி அடம்பன் பொலிஸார் தடை உத்தரவை இன்று மன்னார் நீதிவான் நீதிமன்றத்தில் கோரி இருந்தனர்.

குற்றவியல் நடைமுறைக்கோவை 106 ஆம் பிரிவின் கீழ் குறித்த தடை உத்தரவை அடம்பன் பொலிஸார் கோரி இருந்தனர்.

இந்த வழக்கு இன்று மதியம் மன்னார் நீதிமன்றத்தில் பதில் நீதிவான் இ.கயஸ் பெல்டானோ முன்னிலையில் இடம் பெற்றது.

வழக்கில் சுமார் 20 பேருடைய பெயர்கள் தனி நபர்களாகக் குறிப்பிடப்பட்டிருந்தது.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா உள்ளிட்ட 20 பேருடைய பெயர்கள் குறிப்பிட்டு 21 ஆவது நபராக ஏனைய பொதுமக்கள் எனப் பெயர்கள் குறிப்பிட்டு தடை உத்தரவைப் பொலிஸார் கோரி இருந்தனர்.

பதில் நீதிவான் முன்னிலையில் விசாரணை இடம்பெற்றது. இதன்போது நினைவேந்தலை அமைதியான முறையிலும், அமைதிக்குப் பங்கம் ஏற்படாத வகையிலும் நினைவுகூர மன்னார் நீதிமன்றம் அனுமதி வழங்கியுள்ளது.

நினைவேந்தல் நிகழ்வில் விடுதலைப்புலிகளுக்குச் சொந்தமான இலச்சினைகள் மற்றும் கொடிகளைப் பயன்படுத்தாது, அமைதியான முறையில் நினைவுகூர நீதிமன்றம் அனுமதி வழங்கியுள்ளது." – என்றார்.

## நான்கு பொலிஸார்...

சம்பவம் தொடர்பில் மேலும் ஒரு பொலிஸ் அதிகாரியைக் கைது செய்வதற்கான நடவடிக்கைகள் பொலிஸ் விசாரணைக் குழுவால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

26 வயதுடைய அலெக்ஸ் என்ற இளைஞர் பொலிஸ் காவலில் உயிரிழந்த சம்பவம் தொடர்பில் வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் சம்பந்தப்பட்ட பொலிஸ் உத்தியோகத்தர்கள் அனைவரையும் கைது செய்யுமாறு யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றம் நேற்று உத்தரவு பிறப்பித்ததை அடுத்தே இவர்கள் நான்கு பேரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சித்திரவதைக் குற்றச்சாட்டு எழுந்ததையடுத்து வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையக் குற்ற விசாரணைப் பிரிவைச் சேர்ந்த உப பொலிஸ் பரிசோதகர் உட்பட கைதான நால்வரும் கடந்த திங்கட்கிழமை முதல் பொலிஸ் கண்காணிப்பில் வைக்கப்பட்டிருந்தனர்.

அவர்கள் மீதான குற்றச்சாட்டுத் தொடர்பில் காங்கேசன்துறை பிராந்திய உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் தலைமையில் யாழ்ப்பாணம் மாவட்ட குற்ற விசாரணைப் பிரிவின் பொறுப்பதிகாரி, பொலிஸ் பரிசோதகர் ரி.மேனன் மற்றும் பொலிஸ் உத்தியோகத்தர்கள் கொண்ட குழு விசாரணைகளை முன்னெடுத்தது.

அந்தக் குழுவினரால் நேற்று மாலை கைது செய்யப்பட்ட நால்வரும் இன்று நண்பகல் யாழ்ப்பாணம் நீதிமன்ற நீதிவான் முன்னிலையில் முற்படுத்தப்பட்டனர். நால்வரையும் எதிர்வரும் 4ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

அதையடுத்து அவர்கள் அநுராதபுரம் சிறைச்சாலைக்குக் கொண்டு செல்லப்பட்டனர். அவர்களை யாழ்ப்பாணம் சிறைச்சாலையில் தடுத்து வைத்தால் அங்குள்ள கைதிகளால் அவர்களுக்கு ஆபத்து ஏற்படலாம் எனும் காரணத்தாலேயே அவர்கள் அநுராதபுரம் சிறைச்சாலைக்குக் கொண்டு செல்லப்பட்டனர்.

## கிளிநொச்சியில்...

குற்றவியல் சட்டத்தின் 106இன் கீழ் மாவீரர் நிகழ்வுகளைத் தடை செய்யுமாறு கோரி கிளிநொச்சியில் இருக்கும் 7 பொலிஸ் நிலையங்களும் தனித்தனியே வழக்கைத் தாக்கல் செய்திருந்தன. இந்த வழக்குகள் இன்று முற்பகல் 11 மணிக்கு கிளிநொச்சி மாவட்ட நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இதில் ஏழு பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிகளும் முன்னிலையாகினர்.

இந்த வழக்குக்கு எதிராக ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் மற்றும் சட்டத்தரணி கேசவன் சயந்தன் ஆகியோர் முன்னிலையாகி தமது வாதங்களை முன்வைத்தனர்.

இதன்போது, "நினைவுகூரல் என்பது அடிப்படை உரிமை. அதனை மறுக்க முடியாது. அதேநேரம் குற்றவியல் சட்டத்தின் 106 என்பது பொதுத் தொல்லை விதித்தல் என்பதாகும். அதன் கீழ் நினைவு நிகழ்வுக்குத் தடை விதிக்க முடியாது" – என்று ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் சுட்டிக்காட்டிய போது அதனை மன்று ஏற்றுக்கொண்டது.

106 இன் கீழ் நினைவுகூரலைத் தடுக்க முடியாது எனக் கட்டளையிட்ட மன்ற, 7 வழக்குகளையும் தள்ளுபடி செய்து தீர்ப்பளித்தார்.

## மட்டு. வாகரை...

எதிர்வரும் 27 ஆம் திகதி மாவீரர் நினைவேந்தலையொட்டி வாகரையிலுள்ள கண்டலடி மாவீரர் துயிலும் இல்லத்தை மாவீரர் ஏற்பாட்டுக் குழுவினர் துப்பரவுப் பணி மேற்கொண்டு அங்கு காணியைச் சுற்றி கம்பி வேலி அமைக்கப்பட்ட கொங்கிறீட் தூண்களுக்கு சிவப்பு, மஞ்சள் வர்ணக் கொடிகளை கட்டியிருந்தனர்.

இந்தநிலையில் நேற்று இரவு மாவீரர் துயிலும் இல்லத்துக்குள் அத்துமீறி நுழைந்த விஷமிகள், அங்கு அமைக்கப்பட்டிருந்த மாவீரர்களின் நினைவுக் கல்வெட்டுக்களையும், கம்பி வேலி அமைக்கப்பட்ட கொங்கிறீட் தூண்களையும் அடித்து உடைத்துச் சேதப்படுத்தியுள்ளதுடன் சோடிக்கப்பட்டிருந்த கொடிகளையும் அறுத்து எறிந்துள்ளனர்.











# சந்நிதியான் ஆச்சிரம வாராந்த நிகழ்வில் ஞானச்சுடர் வெளியீடும் உதவி வழங்கலும்



தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரமத்தில் ஞானச்சுடர் 311 ஆவது மலர் வெளியீடும், செயற்றிட்ட உதவிகள் வழங்கலும் நேற்று (24) வெள்ளிக் கிழமை ஆச்சிரமத்தின் வாராந்த நிகழ்வில் இடம்பெற்றன.

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையினரின் ஞானச் சுடர் கார்த்திகை மாத 311 ஆவது மலர் வெளியீட்டு நிகழ்வில் வெளியீட்டுரை , மதிப்பீட்டுரையை அதிபர் செ.பரமேஸ்வரன் ஆற்றினார்.

அதனைத் தொடர்ந்து சிறப்பு பிரதிகளும் வழங்கப்பட்டன.

கல்வியங்காடு இந்து தமிழ் கலவன் பாடசாலைக்கு, இணைப்பாடவிதமான செயற்பாடுகளை மேம்படுத்துவதற்கான நிதிக் கொடுப்பனவாக பாடசாலை சமூகத்திடம் 60 ஆயிரம் ரூபா நிதி வழங்கப்பட்டது.

அச்சுவேலி சரஸ்வதி வித்தியாலயத்துக்கு நூலக வாரத்தை முன்னிட்டு, சிறுவர்களுக்கு நூல்கள் வழங்குவதற்காக பாடசாலை சமூகத்திடம் 15 ஆயிரம் ரூபா நிதி வழங்கப்பட்டது.

மேற்படி செயற்றிட்ட உதவிகளை ஆச்சிரம முதல்வர் கலாநிதி மோகனதாஸ் சுவாமிகள் வழங்கினார்.

# சிறுவர்கள் கடத்தல் தொடர்பில் குற்றப் புலனாய்வு விசாரணை!

இலங்கை சிறுவர்கள் மலேசியா ஊடாக ஐரோப்பிய நாடுகளுக்கு கடத்தப்பட்டமை தொடர்பில் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

குடிவரவு மற்றும் குடியகல்வு கட்டுப் பாட்டாளர் நாயகத்தால் சமர்ப்பிக்கப்பட்ட முறைப்பாட்டின் அடிப்படையில் இந்த விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

வடக்கு, கிழக்கில் வசிக்கும் 18 வயதுக்குட்பட்ட சிறுவர்கள் முதலில் சட்டப்பூர்வ கடவுச்சீட்டு மூலம் மலேசியாவுக்கு அனுப்பப்பட்டு பின்னர் போலிக் கடவுச்சீட்டு மூலம் மலேசியாவிலிருந்து பிரான்ஸ் மற்றும் பிரித்தானியா போன்ற நாடுகளுக்கு அனுப்பப்படுகின்றனர் என்று தகவல் வெளியாகியுள்ளது.

இதுவரை இலங்கையில் இருந்து சுமார் 13 சிறுவர்கள் மலேசியாவுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள நிலையில் கடத்தல்காரர் ஒருவருக்கு இதில் தொடர்பு இருப்பதாக தகவல் வெளியாகியுள்ளது.

இந்த நிலையில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# போதைப்பொருள் பெண் வியாபாரி காத்தான்குடி பகுதியில் கைதானார்!

காத்தான்குடி பிரதேசத்தில் போதைப் பொருள் வியாபாரத்தில் ஈடுபட்டு வந்த பிரபல போதைப் பொருள் பெண் வியாபாரி கைது செய்யப்பட்டுள்ளார்.

மாவட்ட குற்ற விசாரணைப் பிரிவினர் நேற்று (24) வெள்ளிக்கிழமை மாலை அவரைக் கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட பெண்ணிடமிருந்து ஒரு கிராம் 400 மில்லிக்கிராம் போதைப் பொருளை மீட்டு ஒப்படைத்துள்ளனர் என்று காத்தான்குடி பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மாவட்ட குற்ற விசாரணைப் பிரிவினருக்கு கிடைத்த தகவல் ஒன்றுக்கு அமைய உதவி பொலிஸ் மா அதிபரின் ஆலோசனைக்கமைய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் அமல் ஏ. எதிர்மன்னவின் வழிகாட்டலில் மாவட்ட குற்ற விசாரணைப் பிரிவு பொறுப்பதிகாரி பொலிஸ் பரிசோதகர் ஷகி தலைமையிலான பொலிஸார் சம்பவதினமான நேற்று மாலை அவரது வீட்டை முற்றுகையிட்டனர்.

இதன்போது வியாபாரத்தில் ஈடுபட்டுக் கொண்டிருந்த பிரபல பெண் போதைப் பொருள் வியாபாரியை கைது செய்தனர்.

கைது செய்யப்பட்ட பெண்ணை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்துள்ளனர் என்றும் இவரை நீதிமன்றில் முன்னிலைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.



# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

## ஏவல் படையா? காவல் படையா?

இன்று நாடாளுமன்றத்தில் உரையாற்றிய இலங்கைத் தமிழரசுக் கட்சியின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் ஸ்ரீதரன் ஒரு முக்கிய விடயத்தைச் சுட்டிக்காட்டினார்.

இலங்கையின் தேசிய இனப் பிரச்சினை உட்பட பிரதான சிக்கல்களை எடுத்துப் பார்த்தீர்களாயின் அவற்றின் மூலத்தில் இலங்கை பொலிஸ் துறையின் பங்களிப்பு இருப்பதைக் காண முடியும் என்பதுதான் அது.

பிரச்சினைகளின் ஊற்றுக்கண்ணாகவே இருப்பவர்கள் இலங்கையில் பொலிஸ் துறையினர்தான் என்ற நிலைமை ஏற்பட்டுவிட்டது.

பிரச்சினைகளைத் தீர்த்து வைக்கும் காவல் துறையினர் என்பதை விட பிரச்சினைகளை உருவாக்கும் போக்கிரிப் பட்டாளம் என்ற பெயரைத்தான் பொலிஸ் துறை பெரும்பாலும் சம்பாதித்து வைத்திருக்கின்றது.

அவர்கள்ஆட்சிப்பீடத்தின்ஏவல்படையாகச்செயல்படுகிறார்களே தவிர, உண்மையான காவல் படையாக நடப்பதில்லை என்பதுதான் முறைப்பாடு.

தேசிய இனப் பிரச்சினை விவகாரத்தில் கூட, சட்டம் - ஒழுங்கு, நீதி, நியாயத்தின்படி நடக்காமல் ஆட்சி அதிகாரத்தில் இருப்போரின் ஏவல் படையாக காவல் படை செயற்படுகின்றமைதான் நிலைமை இன்று இப்படி விபரீதமாக மாறக் காரணம்.

மாவீரர் நினைவு நிகழ்வைத் தமிழ் மக்கள் அமைதியாக, அதேசமயம் உணர்வுபூர்வமாக அனுஷ்டிக்கின்றார்கள். தம் இனத்துக்காக தம்முயிரை ஈகம் செய்த தியாகிகளை அந்த மக்கள் நினைவேந்தி அனுஷ்டிப்பது அவர்களது நினைவேந்தும் உரிமை. ஜெனிவாவில் ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸில் வரை வலியுறுத்தப்பட்ட அடிப்படை உரிமை இது.

இந்த உரிமையை தேவையற்ற விதத்தில் - பொறுப்பற்ற முறையில் - விபரீதமான சிந்தனையில் - பயங்கரவாத நடவடிக்கையாக அர்த்தப்படுத்தி, நினைவேந்துவதற்கு எதிராக நீதிமன்றங்கள் தோறும் விண்ணப்பங்களுடன் அலைகின்றது பொலிஸ் துறை. நினைவேந்தல்களைக் குழப்புவதில் பொலிஸ் துறை முனைப்பாக நிற்பது அம்பலமான உண்மை.

'பயங்கரவாதியாக'க் கொல்லப்பட்ட ஜே.வி.பி. தலைவர் றோஹண விஜேவீரவை தென்னிலங்கை சுதந்திர வீரனாக ஏற்றிப் போற்றிக் கொண்டாடுவதை - நினைவேந்துவதை - தடுக்காமல், அத்தகைய நிகழ்வுகளுக்குப் பாதுகாப்பு வழங்கும் இலங்கைப் பொலிஸ் படை, வடக்கு - கிழக்கின் தமிழர்கள் மாவீரர்களான தங்கள் இறந்த உறவுகளை நினைவேந்த மட்டும் அனுமதிக்காது, அதைப் 'பயங்கரவாதமாக' சித்திரிக்கத் துடியாய்த் துடிக்கின்றது. இது பேரினவாத சிந்தனையில் வெளிப்பாடு.

இறந்த தங்கள் உறவுகளுக்கு நிறைவேந்தும் உரிமையை மறுக்கும் நிலையில் எந்தத் தேசிய நல்லிணக்கத்திற்கும் தமிழர்கள் ஒன்றுபட்டு வரார் என்பது உறுதியானது. அப்படி இருக்கையில் அத்தகைய நினவேந்தல்களுக்கு இடம் அளிக்காமல், தாங்களாகவே முனைப்புக்காட்டிக் குழப்பும் பொலிஸ் ஏவல் படையினரின் செயற்பாடும் தேசிய நல்லிணக்கம் ஏற்பட்டு விட இடமளிக்காமல் குழப்பும் - ஆப்படிக்கும் - குசும்புத்தனம்தான்.

இலங்கைப் பொலிஸ் தரப்பு காவல் படைக்கு உரியதான நீதி, நியாயத்தை நிலை நாட்டுகின்ற தனது செயற்பாடுகளை நிறுத்தி, நல்லிணக்கம் ஏற்படுவதற்குக் குந்தகமான தேவையற்ற செயற்பாடுகளையே புரிந்து வருகின்றது என்பதுதான் உண்மை.

# தாவரங்களை அடையாளம் காணும் தாவராவதானி போட்டிகள் நாளை!

## சங்கிலியன் பூங்காவில் நடத்த ஏற்பாடு

போர்க் காலத்தில் கூட இயற்கை எனது நண்பன் என்று இயற்கையை நேசித்த தமிழர் வாழ்வியல் இன்று இயற்கையில் இருந்து விலகிச் சென்று கொண்டிருக்கிறது.

இதுவே இன்றைய சுற்றுச் சூழல் பிரச்சினைகளுக்கெல்லாம் மூல காரணம் .

இதனைக் கருத்தில் கொண்டு தமிழ்த் தேசியப் பசுமை இயக்கம், இயற்கையை நேசிக்கக் கற்றுக் கொடுக்கும் வகையில் தாவரங்களை அடையாளம் காணும் தாவராவதானி போட்டி ஒன்றை நல்லூர் சங்கிலியன் பூங்காவில் நடத்தவுள்ளது.

நடைபெற்றுக்கொண்டிருக்கும் கார்த்திகை வாசம் மலர்க் கண்காட்சியில் நாளை 26 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு இந்தப் போட்டி இடம்பெறவுள்ளது.

தாவராவதானி போட்டியில் பால் , வயது வேறு பாடின்றி முன் பதிவு இல்லாமல் எவரும் கலந்து கொள்ளமுடியும். போட்டியில் வெற்றி பெறுபவர்களுக்குத் தாவராவதானி சான்றிதழோடு பரிசுகளும் வழங்கப்படும் என்று தமிழ்த் தேசியப் பசுமை இயக்கம் அறிவித்துள்ளது.

## வடமாகாண மரநடுகை மாதம் கார்த்திகை - 2023

"பூட்டன் நாட்டிய பனைமரம் காய்க்கிறது பாட்டன் நட்ட பலா மரம் பூக்கிறது
வெட்டி எரித்ததன்றி நீயென்ன நிழல் வைத்தாய் மாசடையாச் சூழல் சாவடையா வாழல்!"

கவிஞர் புதுவை இரத்தினதுரை



# மன்னார் பறவைகள் கழகத்தின் முதலாவது பொது நிகழ்வுகள்!

(மன்னார் நிருபர்)

மன்னார் பறவைகள் கழகம், தனது முதலாவது பொது நிகழ்வை மன்னாரில் நடத்த ஏற்பாடு செய்துள்ளது. இதனடிப்படையில் டிசெம்பர் 2 ஆம் திகதி சனிக்கிழமை காலை 7 மணி தொடக்கம் 9.30 மணிவரை மன்னார், தலைமன்னார் பிரதான வீதியில் உள்ள கோரைக்குளம் பகுதியில் அமைக்கப்பட்டுள்ள பறவைகள் கண்காணிப்பகத்தில் பறவைகளைப் பார்வையிடுவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

அதனைத் தொடர்ந்து காலை 10 மணி தொடக்கம் பகல் 12 மணி வரை மன்னார் தேசிய இளைஞர் படை பயிற்சி நிலையத்தில் பறவைகள் மற்றும் அவற்றின் பாதுகாப்பு பற்றிய கலந்துரையாடல் இடம்பெறவுள்ளது.

நிகழ்வில் அனைவரும் வருகை தந்து சிறப்பித்து உங்கள் கருத்துக்களையும் பகிர்ந்து கொள்ள முடியும் என ஏற்பாட்டுக் குழு தெரிவித்துள்ளது.

ஆயிரக் கணக்கான வெளிநாட்டுப் பறவைகளின் இலங்கைக்கான நுழைவாயிலாகவும், சுற்றுலாப் பயணிகளை அதிகளவில் ஈர்க்கும் பிரசித்தி பெற்ற பறவைகள் அதிகம் காணப்படும் இடமாகவும் மன்னார் மாவட்டம் திகழ்கின்றது.

2021 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் சிறிய கருமுதுகுக் கடற்காக்கை மன்னாரில் செயற்கைக்கோள் தொழில் நுட்பத்தின் மூலம் குறியிடப்பட்டு, “மேகா” என்று பெயர் சூட்டப்பட்டிருந்தது.



அது உயர்ந்த இனப்பெருக்கம் செய்யும் தனது இடமான ஆர்ட்டிக்கிலிருந்து அதிசயிக்கத்தக்க வகையில் மூன்றாவது தடவையாக இலங்கைக்கான தனது பயணத்தை ஆரம்பித்துள்ளது.

செயற்கைக்கோள் தொழில்நுட்பம் மூலம் குறியிடப்பட்ட நாளிலிருந்து இது வரை “மேகா” 65,000 கிலோமீற்றர்வரை பயணித்துள்ளது என்பது அறியப்பட்டுள்ளது.

இந்நிகழ்வில் பங்கேற்பவர்களுக்கு, மன்னார் பறவைகள் கழகத்தின் 2024 ஆம் ஆண்டுக்கான வருடாந்த அங்கத்துவத்தை இலவசமாக வழங்க உள்ளனர். இந் நிகழ்வில் உங்கள் பெயர்களை பதிவு செய்ய, உங்கள் பெயர் மற்றும் பணிபுரியும் நிறுவனம் பங்கு பற்றுபவர்களின் எண்ணிக்கை என்பவற்றை ‘வாட்ஸ் அப்’ செயலியினூடக அனுப்பி வைக்குமாறு வேண்டப்படுகிறார்கள்.

இது தொடர்பாக விவரங்கள் அறிவதற்கு டிலக்சன் (076-1265041) லஹிரு (071-4562948) ஆகியோரைத் தொடர்பு கொள்ளுமாறு ஏற்பாட்டுக் குழுவினர் தெரிவித்துள்ளனர்.





# சகவாழ்வுக் கருத்தரங்கு

(எம். எப். நவாஸ் )

அட்டாளைச்சேனை பிரதேசத்தில் காணப்படுகின்ற பல்லின சமூகங்களின் சமய மற்றும் அரச உத்தியோகத்தர்கள், சமூகத்தில் செல்வாக்கு செலுத்துவோரை ஒன்றிணைத்து சகவாழ்வு தொடர்பான கருத்தரங்கு நடத்தப்பட்டுள்ளது.

நீதி மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சும் அட்டாளைச்சேனை பிரதேச செயலகமும் இணைந்து சகவாழ்வு தொடர்பான ஆக்க பூர்வமான கருத்தாடல்கள் பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் கலாச்சார உத்தியோகத்தர் எம். எஸ். ஜௌபர் தலைமையில் இடம்பெற்றன.

இந்த நிகழ்வில் விசேட பேச்சாளராக இந்தியா பாலா விகாசாவுக்கான இலங்கைக்கான பிரதிநிதி திருமதி நூர் மசியா கலந்துகொண்டார்.

இதில் வளவாளர்களாக சட்டத்தரணி நஹீஜா முஸாபீர் சட்டத்தின் ஆட்சி என்ற தலைப்பிலும் கிழக்கு மாகாண உளவளத்துணை உத்தியோகத்தர் எம். எஸ். எம். இக்ராம் சமூக நல்லிணக்கம் பற்றியும் விரிவுரை நிகழ்த்தினர்.



# அகிலத்திருநாயகிக்கு பாராட்டு!

**(எஸ்.தவசீலன்)**

72 வயது சாதனைப் பெண் திருமதி. அகிலத்திருநாயகி முல்லைத்தீவு மாவட்டச் செயலகத்தால் பாராட்டிக் கௌரவிக்கப்பட்டுள்ளார்.

பிலிப்பைன்ஸில் நடைபெற்ற தேசிய இளையோர் மற்றும் மூத்தோருக்கான மெய்வன்மைப் போட்டியில் முல்லைத்தீவு, முள்ளியவளையைச் சேர்ந்த 72 வயதுடைய திருமதி அகிலத்திருநாயகி 1500 மீற்றர் ஓட்டப் போட்டி மற்றும், 5000 மீற்றர் விரைவு நடைப் போட்டி ஆகியவற்றில் 2 தங்கப் பதக்கங்களையும் 800 மீற்றர் ஓட்டப் போட்டியில் ஒரு வெண்கலப் பதக்கத்தையும் வென்று இலங்கைக்கும் முல்லைத்தீவு மாவட்டத்துக்கும் பெருமை சேர்த்துள்ளார். இவரைப் பாராட்டிக் கௌரவிக்கும் நிகழ்வு இன்று முல்லைத்தீவு மாவட்டச் செயலக பண்டாரவன்னியன் மாநாட்டு மண்டபத்தில் மாவட்ட அரச அதிபர் அ.உமாமகேஸ்வரன் தலைமையில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் திருமதி அகிலத்திருநாயகியின் சாதனைகள் தொடர்பாக வாழ்த்துரைகள் இடம்பெற்றது. நினைவுச் சின்னம் மற்றும் பணமுடிப்பு வழங்கியும் பொன்னாடை, மாலை அணிவித்தும் விழா நாயகி கௌரவிக்கப்பட்டார்.

நிகழ்வில் மாவட்ட மேலதிக அரச அதிபர் (நிர்வாகம்) எஸ்.குணபாலன், பிரதம உள்ளகக் கணக்காய்வாளர் லிங்கேஸ்வரன் , பிரதம கணக்காளர் ம. செல்வரட்ணம், சமுர்த்தி பணிப்பாளர் ஆ.முபாரக், மாவட்ட பதில் திட்டமிடல் பணிப்பாளர் திருமதி க.ஜெயபவானி, பதவி நிலை உத்தியோகத்தர்கள், உத்தியோகத்தர்கள் மற்றும் சமூக செயற்பாட்டாளர் சண்முகலிங்கம், திருமதி அகிலத்திருநாயகியின் ஆசிரியர் திருமதி.ஐயம்பிள்ளை என பலரும் கலந்து கொண்டனர்.


















# கொங்ரீட் வீதிகளில் வெள்ளம்: பொது மக்களுக்கு அசௌகரியம்!

(அஸ்ஹர் இப்றாஹிம்)

காரைதீவு பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட மாளிகைக்காடு மற்றும் காரைதீவு பிரதேசங்களில் முறையான வடிகான் வசதிகள் செய்யப்படாமல் போடப்பட்ட கொங்கிரீட் வீதிகளில் தேங்கி நிற்கும் வெள்ளத்தால் பொதுமக்கள் பலவிதமான சுகாதார சீர்கேடுகளுக்கு முகம் கொடுக்க வேண்டியுள்ளது.

வடிகான் வசதிகள் ஏற்படுத்தப்படாமல் கொங்கிரீட் வீதிகள் போடப்பட்டுள்ளன. ,தனால் மழைநீர் வழிந்தோடாமப் பல நாள்களுக்கு வெள்ளநீர் தேங்கி நிற்கிறது. ,தனால் பலவிதமான இடர்பாடுகளுக்கு பிரதேச மக்கள் முகம் கொடுக்க வேண்டியுள்ளது. துர் நாற்றமும் வீசத்தொடங்கியுமுள்ளது.

மாளிகைக்காடு றியாழ் மர ஆலை வீதி, காரைதீவு விவேகானந்தா வீதி என்பன இந்த நிலையில் மிகவும் மோசமாக பாதிக்கப்பட்டுள்ளன.

டெங்கு குடம்பிகள் பரவலாம் என்ற பீதியும் தோன்றியுள்ளது.





# கல்முனை சாஹிறாவில் செஸ் சம்பியன் போட்டிகள்

(நூருல் ஹுதா உமர் )

கல்முனை கல்வி வலய சாய்ந்த மருது சாஹிறா கல்லூரியின் 75 ஆவது ஆண்டை முன்னிட்டு மிக பிரமாண்டமாக செஸ் சம்பியன் போட்டிகளும் பரிசளிப்பும் பாடசாலை மண்டபத்தில் நடைபெற்றன.இப்போட்டி நிகழ்வில் கலந்து கொள்வதற்காக கிழக்கு மாகாணத்தில் உள்ள அனைத்து பாடசாலைக்கும் அழைப்பு விடுக்கப்பட்டது. அதன் அடிப்படையில் 450 போட்டியாளர்கள்கள் கலந்து கொண்டனர்.

கல்லூரியின் அதிபர் எம். ஐ.ஜாபிர் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பிரதம அதிதியாக தொழிலதிபரும், நாபீர் நிதியத்தின் ஸ்தாபகருமான பொறியியலாளர் கலாநிதி உதுமான் கண்டு நாபீர் கலந்து கொண்டார். கௌரவ அதிதியாக சாய்ந்தமருது கோட்டக்கல்வி அதிகாரியும், உதவிக் கல்வி பணிப்பாளருமான என்.எம். அப்துல் மலிக் கலந்து கொண்டார்.



பாடசாலை பிரதி அதிபர், உதவி அதிபர், ஆசிரியர்கள், பாடசாலை நிர்வாகம் மற்றும் பெற்றோர்களும் கலந்து கொண்டனர்.





# குடிசன மதிப்பீட்டைப் பார்வையிட நேரில் சென்றார் அரச அதிபர்!

(அஸ்ஹர் ஆதம்)

நிந்தவூரில் பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட கிராம பிரிவுகளில் நடைபெற்று வரும் குடிசன மற்றும் வீட்டுக் கணக்கெடுப்பு நடவடிக்கைகளை பார்வையிடுவதற்காக அம்பாறை மாவட்ட அரச அதிபர் சிந்தக்க அபேவிக்ரம நிந்தவூருக்கு விஜயம் செய்தார்.

இதன் போது மாவட்ட புள்ளி விவர வியலாளர், புள்ளி விபரவியல் இணைப்பாளர் ஆகியோரும் இவருடன் வருகை தந்தனர்.

நிந்தவூர் 15 மற்றும் 18 ஆம் கிராம பிரிவுகளில் கள விஜயம் மேற்கொண்டு களப்பணிகள் தொடர்பான அவதானிப்புக்களை மேற்பார்வை செய்தனர்.

இவர்களுடன் நிந்தவூர் பிரதேச செயலாளர் சட்டத்தரணி ஏ.எம். அப்துல் லத்தீப் மற்றும் நிர்வாக உத்தியோகத்தர், கிராம நிர்வாக உத்தியோகத்தர், புள்ளி விவரவியல் உத்தியோகத்தர் மற்றும் வட்டத்துக்குப் பொறுப்பான உத்தியோகத்தர்களும் கலந்து கொண்டனர்.



# சத்ய சாயி பாபாவின் 98ஆவது ஜனன நிகழ்வு

ஸ்ரீ சத்ய சாயி பாபாவின் 98ஆவது ஜனன தின நிகழ்வுகள் கடந்த வியாழக்கிழமை, கொழும்பு புதுச்செட்டித் தெரு சாயி நிலையத்தில் பிரதம அறங்காவலர் எஸ்.என்.உதயநாயகன் தலைமையில் இடம்பெற்றன. இதன்போது பிரசாந்தி கொடியேற்றம் மற்றும் பிறந்த நாள் கேக் வெட்டும் நிகழ்வும் இடம்பெற்றன. சாயி மகளிர் சங்க மூத்த உறுப்பினர் செல்வி சரஸ்வதி வீரையா சாயி நிலையத்தின் சார்பில் கௌரவிக்கப்பட்டார்.









# நாள்காட்டி வெளியீட்டு

(ஹஸ்பர்)

திஹாரிய அல் அஸ்ஹர் மத்திய கல்லூரியின் நாள்காட்டி வெளியீட்டு வைபவம் அண்மையில் திஹாறிய வாரன வீதியில் அமைந்திருக்கும் தனியார் மண்டபம் ஒன்றில் நடைபெற்றது.

நிகழ்வில் கல்லூரியின் அதிபர் ஏ.ஜெ.எம். புர்க்கான் தலைமை தாங்கினார். நிகழ்வுக்குச் சிறப்பு அதிதியாக இலங்கை ஒலிபர்புக் கூட்டுத்தாபன முஸ்லிம் சேவை பணிப்பாளர் எம்.ஜெ. எப்.றினூசியா மற்றும் மேமன் நலன்புரி மன்றத்தின் பொது முகாமையாளர் ஆசிரியர் நூர்தீன் யாகூப் ஆகியோர் கலந்து கொண்டனர்.

நிகழ்வில் கல்லூரியின் பழைய மாணவர் சங்க உப தலைவர் அஸ்மி அஸ்ரப் மற்றும் பாடசாலை அபிவிருத்தி நிறை வேற்றுக்குழு செயலாளர் சஹ்னி மற்றும் பழைய மாணவர் சங்க செயலாளர் எம்.அர்பகான் ஆகியோர் உரை நிகழ்த்தினர்.

நாள்காட்டிக்கான அனுசரணை வழங்கியோருக்கான நினைவுச் சின்னங்களும் அதிபரால் வழங்கப்பட்டன.



# மாற்றுத் திறனாளிகளுக்குத் தொழில் வாய்ப்பளித்தல் தொடர்பாக மதிப்பீடு!

(அஸ்ஹர் இப்றாஹிம்)

வடக்கு, கிழக்கு உட்பட நாட்டின் பல பகுதிகளிலும் உள்ள மாற்று திறனாளிகளுக்கான வேலை வாய்ப்பு திட்டம் தொடர்பான மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

சமூக சேவை திணைக்களத்தின் வடக்கு, கிழக்கு உட்பட நாட்டின் பல பகுதிகளையும் சேர்ந்த விசேட தேவையுடையவர்களுக்கான வேலை வாய்ப்புத் திட்டத்துக்குப் பங்களிப்புச் செய்யும் நிறுவனங்களை மதிப்பீடு செய்யும் நிகழ்வு அண்மையில் கொழும்பு கிங்ஸ்பெரி ஹோட்டலில் அண்மையில் நடைபெற்றது.

மாற்றுத்திறனாளிகளுக்கான புன்னகை மையம் ஒழுங்கு செய்திருந்த மேற்படி நிகழ்வில் சமூக சேவை திணைக்களத்தின் பணிப்பாளர் அனோஜா, ஜெய்க்கா சர்வதேச தன்னார்வு நிறுவனத்தின் இலங்கைக்கான பிரதிநிதி யமடா ரெட்யூடா உட்பட நிறுவனங்களின் பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர்.




வடமாகாண மரநடுகை மாதம்
கார்த்திகை 01 - 30, 2023
“ஒரு தேசமாக நிலைத்திருக்க, ஒரு மாநிலமாக வளர,
மக்களாக வாழ எங்களிடம் மரங்கள் இருக்க வேண்டும்.”
தியோடர் ரூஸ்வெல்ற் - அமெரிக்காவின் 26ஆவது ஜனாதிபதி
ஆளுக்கொரு மரம் நடுவோம்
நாளுக்கொரு வரம் பெறுவோம்
கார்த்திகையில் மரநடுகை தேசத்தை மாத்திரமல்ல;
தமிழ்த் தேசியத்தின் ஆன்மாவையும் குளிரச்செய்யும்!
தமிழ்த் தேசியப் பசுமை இயக்கம்


AIRPORT PIKUP & DROPING
COLOMBO - JAFFNA
WEDDING SERVICE
DAY RENTING
KDH
BEST FOR
VAN RENT
Make Your Ride Better
CALL NOW
+94 773 776 882




# ஓமானின் 53 ஆவது தேசிய தினம்!

(அஷ்ரப் ஏ. சமத்)

ஓமான் நாட்டின் 53 ஆவது தேசிய தினம் கொழும்பு சாங்கரில்லா விடுதியில் அண்மையில் ஓமான் நாட்டின் இலங்கைக்கான தூதர் அஹமட் அலி செட் அல் ராசிடி தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம அதிதியாகக் கல்வி அமைச்சர் சுசில் பிரேம ஜெயந்த கலந்த கொண்டார்.

இந்த நிகழ்வில் வெளிநாட்டுத் தூதர்கள், அமைச்சர்கள், இலங்கையில் வாழும் ஓமானியர்கள் கலந்து கொண்டனர்.



# கல்குடாவில் மாணவர் கௌரவிப்பு!

(பழுவூரான்)

அண்மையில் வெளியான தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தி யடைந்த மாணவர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு கல்குடா கல்வி வலயத்திலுள்ள பேத்தாழை சந்திரகாந்தன் வித்தியா லயத்தில் இடம்பெற்றது.

பாடசாலையில் 12 மாணவர்கள் சித்திபெற்று பாடசாலைக்கு பெருமை சேர்த்துள்ளனர். இதன்போது அதிதிகள் மலர்மாலை அணிவித்து வரவேற்கப் பட்டனர். மங்கல விளக்கேற்றல், இறை வழிபாட்டுடன் நிகழ்வுகள் நடைபெற் றது.

பாடசாலை அதிபர் க.கதிர்காமநாதன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில், அதிதியாக கலந்து கொண்ட கிராமிய வீதி அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தன் பாராட்டு களை தெரிவித்தார்.

சித்தியடைந்த மாணவர்களுக்கு சைக்கிள்கள் வழங்கினார். அத்துடன் சிறுவர் சேமிப்பு கணக்கு புத்தகமும் வழங்கப்பட்டது.



# தற்காலிக மீன்வாடி அமைக்க அனுமதி வழங்கக் கோரல்!



(அஸ்ஹர் ஆதம்)

கல்முனை பிரதேச செயலக நிர்வாக எல்லைக்கு உட்பட்ட மருதமுனையில் கரைவலைப்பாட்டின் நோக்கத்துக்காகத் தற்காலிக மீன்வாடி அமைப்பதற்கு அனுமதிகள் கோரப்பட்டுள்ளன.

இதற்கு 14 அனுமதிப் பத்திரங்கள் மாகாண உதவிக் காணி ஆணையாளர் கே.எல்.எம். முஸம்மிலால் பிரதேச செயலர் ஜே.லியாகத் அலியிடம் அண்மையில் கையளிக்கப்பட்டன.





# மாணவருக்கு அறிவூட்டல்!

(அஸ்ஹர் ஆதம், எம்.எம். றம்ஸீன்)

கல்முனை அல் பஹ்ரியா மகா வித்தியாலயத்தில் மாணவிகளுக்கு அடிப்படை வாழ்க்கை பாதுகாப்பு தொடர்பான அறிவூட்டல் நிகழ்வொன்று அண்மையில் இடம்பெற்றது

கல்முனை அஷ்ரப் ஞாபகார்த்த வைத்தியசாலையின் மயக்க மருந்து வழங்கும் வைத்திய நிபுணர் டாக்டர் கே.சுதேஸ்வரி தலைமையிலான குழு இந்தப் பயிற்சியை வழங்கியது.

பாடசாலை அதிபர் எம்.எஸ்.எம். பைசால் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் வழிகாட்டல் ஆலோசனை பிரிவுக்கு பொறுப்பான ஆசிரியை ஏ.எம்.ஜனூன் நௌஷாத் உட்பட ஆசிரியர்கள் பலர் கலந்து கொண்டனர்.



# விளையாட்டு உபகரணங்கள் வழங்கல்

(அஸ்ஹர் இப்றாஹிம்)

ஓட்டமாவடி முன்னாள் கிராம சேவை உத்தியோஸ்தரும், பிரதேச சபை உறுப்பினருமான எம்.எம். ஹனிபாவின் அயராது முயற்சியால் பெறுமதியான விளையாட்டு உபகரணங்கள், விளையாட்டுத் துறை அமைச்சர் ரொஷான் ரணசிங்கவால் விளையாட்டுத்துறை அமைச்சில் வைத்து உத்தியோகபூர் வமாக வழங்கப்பட்டன. ஓட்டமாவடிப் பிரதேசத்தைச் சேர்ந்த வளர்பிறை விளையாட்டுக் கழகம், நியூ ஸ்டார் விளையாட்டுக்கழகம், யங் சோல்ஜஸ் விளையாட்டுக்கழகம், சல் சபீல் விளையாட்டுக்கழகம் , ரோயல் விளையாட்டுக்கழகம் ஆகிய விளையாட்டுக் கழகங்களுக்கே இவ்வாறான பெறுமதி வாய்ந்த விளையாட்டு உபகரணங்கள் வழங்கப்பட்டன.



## தமிழர் வீரத்தை பறைசாற்றும் நடுகல்:

# மாவீரர் தியாகத்தை உணர்த்தும் வழிபாடு!

■ நவீனன்

**(மாவீரர்களின் வேட்கையும், வீரமும், விவேகமும்தான் விடுதலைப் போரின் உயிர்மூச்சு. இவர்களது வெற்றிகளின் பின்னால் வேதனைகள், எத்தனையோ வீரமரணங்கள். தமிழ் மண்ணில் கலந்த குருதியின் தியாகமே நாளைய அரசாக உருமாறும். இவர்கள் களம் கண்ட கதையை தலைமுறைகள் ஊடாகக் காலம் எப்போதும் சொல்லிக் கொண்டிருக்கும். மாவீரர்களின் வீரத்தைப் பறைசாற்றும் நடுகற்களை வணங்குவொம்.)**

ஈழப் போரில் உயிரிழந்த வீர மைந்தர்களின் வீரத் தியாகத்தை வெளிப்படுத்தும் நடுகல்கள் மாவீரர் துயிலும் இல்லங்களில் நிறுவப்பட்டுருந்தன. இன்று அவை சிதைக்கப்பட்டாலும் நடுகல் வரலாறு தமிழர்களின் வாழ்வோடு பின்னிப் பிணைந்ததாகும்.

உலக வரலாற்றில் எங்குமே, எப்பொழுதுமே நிகழ்ந்திராத அற்புதமான தியாகங்கள் ஈழ மண்ணில் நிகழ்ந்திருக்கின்றன. மனித ஈகத்தின் உச்சங்களை ஈழப் போராட்ட வரலாறு தொட்டு நிற்கிறது. இந்த மகோன்னதமான தியாக வரலாற்றைப் படைத்தவர்கள் மாவீரர்கள். அவர்கள் கண்ட கனவுகளுடன் மீளாத் துயில் கொள்ளும் கல்லறை மேல் பேரொளியாக அவர்களை அடையாளப்படுத்துவதே இந்த நடுகற்கள் ஆகும்.

தமிழில் நடுகற்கள் 2 ஆயிரத்து 500 ஆண்டுகால வரலாற்றை உடையவை. தமிழர் வீரத்தைப் பறைசாற்றும் நடுகற்கள், இறந்தவர்களின் நினைவாக எடுக்கப்படும் நினைவுக் கல் ஆகும்.

போரில் தன் உயிர் துறந்து தாய் மண்ணுக்காகச் செய்யும் உயிர் தியாகத்துக்கான அடையாளச் சின்னங்களாக விளங்குகின்ற நடுகற்கள் அல்லது இவற்றை “வீரக் கற்கள்” என்றும் கூறுவர்.

பழந்தமிழ்ப் பண்பாட்டில் நடுகல்

உலகின் பல பகுதிகளிலும் பெருங்கற்காலம் முதலே இவ்வழக்கம் இருந்து வந்துள்ளது. நினைவுக் கற்கள் எடுக்கும் வழக்கம் ஒரு குறிப்பிட்ட காலப் பகுதிக்கோ, ஒரு பிரதேசத்துக்கோ அல்லது தனிப்பட்ட பண்பாட்டைச் சேர்ந்தவர்களுக்கோ உரிய வழக்கம் அல்ல.

போரில் பங்குபற்றி உயிர்த்துறந்த வீரனுக்கு நடுகல் எடுத்து அவன் வீரத்தைப் போற்றி அவனை இறை நிலைக்கு உயர்த்துவது பழந்தமிழரின் உயர்ந்த வீரப்பண்பாடு. நடுகற்களில் பொறிக்கப்படும் செய்திகள் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்தவை. வீரம் பொறிக்கப்பட்ட நடுகற்களும், உயர்ந்த தமிழ் பண்பை உலகுக்கு எடுத்துக் காட்டுகின்றன.

தமிழ் மக்களின் அறிவு, ஆற்றல், பண்பு, கொடை, வீரசுவர்க்கம் என பல பண்பாட்டுக் கூறுகள் நடுகற்களின் வழி பழந்தமிழ்ப் பண்பாட்டை எடுத்துக் கூறுகின்றன. நடுகற்கள் பிற்காலங்களில் கோவில்களாகவும், தூண்களாகவும், வழிபாட்டுச் சின்னங்களாகவும், சுமைதாங்கிக் கற்களாகவும் உருமாற்றம் பெறுகின்றன. நடுகற்கள் வீரன் குலதெய்வமாக மாற்றப்பட்டு நாட்டார் தெய்வ நிலைக்கு உயர்கின்றன.

போரில் மடிந்த வீரர்களுக்காக எடுக்கப்படும் நினைவுக் கற்களை மக்கள் வணங்கி வந்தமை பற்றியும் பண்டைக்கால இலக்கியங்களில் சிறப்பித்துக் கூறப்பட்டுள்ளன.

### பண்டைய இலக்கியத்தில் நடுகல்


தமிழ் இலக்கியங்கள் சொல்லும் பல உயிர்த் தியாகங்கள் நடுகற்களாக நமக்கு காணக்கிடைக்கின்றன. திருக்குறளில், குறள் எண் 400 இல், மாடு என்ற சொல், செல்வம் என்று சுட்டப்படுகிறது. பசு, எருமை, ஆடு ஆகிய மூன்று விலங்குகளையும் குறிக்க ‘தொறு’ என்ற சொல்லை நம் முன்னோர் கையாண்டுள்ளனர். போரில் உயிரிழந்த வீரர்களுக்கு மட்டும் நடுகல் எழுப்பப்படுவதில்லை.

போரில் இறந்தால் அவ்வீரர்களுக்கு நடுகல் நட்டு வணங்கி வழிபட்டனர். சங்க இலக்கியங்களில் கூறப்பட்டுள்ள






(16ஆம் பக்கம் பார்க்க)








# மாவீரர் தியாகத்தை உணர்த்தும் வழிபாடு!

(15ஆம் பக்கத் தொடர்ச்சி)

நடுகல் பற்றிய செய்திகள் அனைத்தும் போரில் வீரமரணம் அடைந்த ஆடவர்களின் நினைவைப் போற்றி வணங்குவதற்காக நடப்பட்ட கற்களைப் பற்றியதாகவே உள்ளன.

நடுகற்களில் பழங்கால சமூகநிலை, பண்பாடு, மொழி, நம்பிக்கைகள், பழக்கவழக்கங்கள், உயிர்த்தியாகம், வழிபாடு போன்ற உட் கூறுகள் காணப் படுகின்றன. தென்னிந்தியாவில்தான் நடுகற்கள் பெரும் எண்ணிக்கையில் கிடைக்கின்றன. அதிலும் குறிப்பாகத் தமிழகத்தில் நடுகற்கள் வரலாற்றுப் பெருமையும் தொன்மையும் உடையன வாகக் காணப்படுகின்றன.

## உயிர்த் தியாகமும் வீரவழிபாடும்

குறிப்பாகப் போர்களின்போது ஏற்படும் உயிரிழப்புகளே நடுகற்கள் ஏற்படுவதற்கு முக்கியக் காரணம். ஊரை அழிக்க வந்தவர்களிடமிருந்து ஊரைக் காப்பாற்றியவர்களுக்கும், பெண்கள் மானம் காத்தவர்களுக்கும், கொடிய விலங்குகளுடன் போரிட்டு உயிர் துறந்தவர்களுக்கும் நினைவாக நடுகற்கள் எழுப்பப்படுகின்றன.

தமிழ் நாட்டில் நடுகல் வழக்கம் மிகப் பழங்காலம் முதலே இருந் துள்ளமை, தொல்லியல் ஆய்வுகள் மூலம் தெரிய வந்துள்ளது. மேலும் நடுகற்கள் மக்களால் வணங்கப்பட்டு இறை நிலைக்கு உயர்ந்து ஊர்த் தெய்வங்களாக உருமாறுகின்றன எனவும் அறியப்பட்டுள்ளது.

## தமிழ்நாட்டில் நடுகற்கள்

தமிழ் நாட்டில் சேரன் , சோழன், பாண்டியன் காலத்திலும் நடுகற்கள் எடுக்கப்பட்டுள்ளன. முகத்திலும் மார்பிலும் விழுப்புண்களைப் பெற்று, வீரத்தோடு முன்னின்று, பொருதுபட்ட வீரர்க்கு, அவர் தம் பீடும் பெயரும் எழுதிய நடுகற்களை நிறுவி, பூவும் புகையும் காட்டி, சிறப்பு செய்தல் வழக் கம். இது நடுகல் வணக்கம் எனப்பட்டது.

அக்காலத்து நிறுவப் பெற்று மண்ணில் புதையுண்ட வீர நடுகற்கள் இக்காலத்து கல்வெட்டு ஆராய்ச்சியா ளர்களால் வெளிக்கொணரப்பட்டு வருகின்றன.

சேரன் செங்குட்டுவன், கண்ணகிக்கு நடுகல் நட்டுக் கோயில் அமைத்து வழிபாடு நிகழ்த்த ஏற்பாடு செய்ததைச் சிலப்பதிகாரம் கூறுகிறது. பெண்க ளுக்கு நடுகல் நடப்பட்ட செய்தி சங்க இலக்கியங்களில் காணப்படவில்லை. நடுகல் தெய்வமாக வணங்கப்பட்டதைப் பண்டைய இலக்கியங்கள் தெரி விக்கின்றன.

## சங்ககாலத்தில் வீர நடுகல்

சங்கப் பாடல்களிலும், பின்னர் எழுதப்பட்ட நூல்களிலும் நடுகற்கள் பற்றிய தகவல்கள் உள்ளன. தமிழ் நாட்டின் செங்கம், தருமபுரி, தேன் கனிக்கோட்டை ஆகியவற்றை அண்டிய பகுதிகளிலேயே பெரும் எண்ணிக் கையில் நடுகற்கள் காணப்படுகின்றன. இந்தப் பகுதிகளில் ஆட்சி செய்த அதியமான் போன்ற அரசர்கள் காலத்தில் நடுகற்கள் எழுப்பப்பட்டு உள்ளமை தெரிகின்றது.

தமிழ் மரபில் கிராமப் புறத்தை ஒட்டிய பழந்தெய்வங்கள் நடுகல்லை ஒட்டியே தோன்றியவை. அத்துடன் பயிர்த் தொழிலுக்கு அடிப்படையாக விளங்குவது நீர். அந்த நீரைத் தேக்கி வைக்க உதவும் ஏரி உடைந்தபோது அதனைப் பாதுகாப்பதற்காக உயிரை நீத்து சமுதாயக் கடமையாற்றிய வருக்கும் நடுகற்கள் உள்ளன.

தமிழரின் வீரப் பண்பாடான ஜல்லிக் கட்டு எனும் ஏறு தழுவுதலின் போது உயிர்நீத்த வீரருக்கும் நடுகற்கள் எழுப்பப்பட்டுள்ளன. இன்றும் ஜல்லிக் கட்டில் உயிரிழந்த வீர மைந்தர்க ளுக்கும் தமிழரின் வீரத்தியாகத்தை வெளிப்படுத்தும் நடுகல் அமைக்கப்பட்டு வருகின்றன.

## நடுகல் வழிபடும் முறை

நடு கற்களுக்கு நாள்தோறும் தீப தூபம் காட்டிப் பூசை செய்யும் வழக்க மும் இருந்தது. இதனை புறநானூறு, சிலப்பதிகாரம், மலைபடுகடாம் முதலிய நூல்கள் குறிப்பிடுகின்றன. நடு கல்லைச் சுற்றிலும் கல் அடுக்கி அதனைப் பதுக்கை ஆக்குவர். இந்த நடு கற்களுக்கு ‘வல்லாண் பதுக்கைக் கடவுள்’ என்றும் பெயர் உள்ளது.

நடு கல்லோடு சேர்த்து மயில் தோகைகளை கட்டுவர். உடுக்கு அடிப் பர். தோப்பி என்னும் கள் வைத்துப் படைப்பர். உயிரினங்களைப் பலியிடு வர். இந்தப் பதுக்கைக் கோயில்கள் வழிப் பாதைகள் கூடுமிடத்தில் அமைக் கப்பட்டிருக்கும்.

அத்தோடு நடுகல்லுக்கு விடியற் காலையில் நன்னீராட்டி நெய் விளக்கேற்றிப் படையலைப் படைத்தும் வந்தனர்.

## நடுகல் குறித்த நம்பிக்கைகள்

நடுகல்லை நாள் தோறும் வணங் கினால் விருந்தினர் எதிர்ப்படுவர் என்றும் போரில் கணவனுக்கும் அரசனுக்கும் வெற்றி கிட்டும் என்றும் பெண்களிடையே நம்பிக்கையும் இருந்தது.

நடு கற்களைத் தவறாது வணங்கி னால் மழை மிகுதியாகப் பெய்யும். மழை பெய்தால் கொடுங்கானம் வறட்சி நீங்கிக் குளிரும். மரம் செடிகள் தளிர்த் துப் பூக்கும். அதனால் வறட்சிமிக்க இந்தக் கொடிய வழியில் வண்டுகள் மிகுதியும் மொய்க்கும். வளம் பெருகும் என்ற நம்பிக்கையும் மக்களிடையே இருந்தது. இதனை புறநானூற்றுப் பாடலடிகள் தெளிவுற உணர்த்து கின்றன.

## மாவீரர்களுக்கு நடுகற்கள்

மாவீரர்களின் வேட்கையும், வீரமும், விவேகமும் தான் விடுதலைப்போரின் உயிர்மூச்சு. இவர்களது வெற்றிகளின் பின்னால் வேதனைகள், எத்தனையோ வீரமரணங்கள்.

தமிழ் மண்ணில் கலந்த குருதியின் தியாகமே நாளைய அரசாக உரு மாறும். இவர்கள் களம் கண்ட கதையை தலைமுறைகள் ஊடாகக் காலம் எப்போதும் சொல்லிக் கொண்டிருக்கும். மாவீரர்களின் வீரத்தைப் பறைசாற்றும் நடுகற்களை வணங்குவோம்.



# மூதூர் சந்தனவெட்டையில் இடம்பெற்ற நடமாடும் சேவை

(ஹஸ்பர்)

விழுது ஆற்றல் மேம்பாட்டு மையத்தின் ஏற்பாட்டில், 'ஓரங்கட்டப்பட்ட சமூகத்துக்கான இளையோரின் குரல்' என்ற தொனிப்பொருளில் மூதூர் சந்தனவெட்டைக் கிராமத்தில் நடமாடும் சேவை இடம்பெற்றது.

சந்தனவெட்டை கிராம அபிவிருத்திச் சங்கக் கட்டடத்தில் இந்த நடமாடும் சேவைகள் இடம்பெற்றன.

மூதூர் கிராமத்தில் பழங்குடிகள் அதிகம் வாழும் நிலையில் அங்கு அடிப்படை வசதிகள் மிகக் குறைவாக உள்ளன.

இந்த நிலையில் அவர்கள் சட்ட ஆவணங்கள் எவையும் கொண்டிராத நிலையில் அவர்களுக்கு அவற்றைப் பொற்றுக் கோடுக்கும் நோக்கில் இந்த நடமாடும் சேவை இடம்பெற்றது.

பெண்கள், சிறுவர்கள் பாதுகாப்பின்மை, கல்வி, மந்த போசாக்கு, பால் நிலை சார்ந்த ஒழுங்கற்ற சுகாதாரக் கட்டமைப்பு போன்றன அதிகரித்துள்ள நிலையில் இத்தகைய விடயங்கள் தொடர்பிலும் இதன்போது விளக்கமளிக்கப்பட்டன.

நிகழ்வில் சம்பூர் பொலிஸ் நிலையத்தின் குற்றவியல் பிரிவு உத்தியோகத்தர்கள், மூதூர் சுகாதாரப் பணிமனையின் பொது சுகாதார பரிசோதகர் , குடும்ப நல உத்தியோகத்தர், பிரதேச செயலகத்தின் பதிவாளர் கிளை உத்தியோகத்தர்கள், சிறுவர் நன்னடத்தை உத்தியோகத்தர் மற்றும் கட்டைபறிச்சான் தெற்கு கிராம சேவகர் பிரிவுக்கு உட்பட்ட கிராம அபிவிருத்திச் சங்கங்கள், மகளிர் அபிவிருத்திச் சங்கம் கலந்து கொண்டன.

சந்தனவெட்டை கிராமத்தில் அடையாள அட்டை புதுப்பித்தல், பிறப்பு, இறப்பு மற்றும் விவாகப்பதிவிடலுக்கான விண்ணப்பங்கள் ஏற்றல், புதிய விவாகப் பதிவுகள் போன்றனவும் இடம்பெற்றன.



# மன்னார் மாவட்டத்தின் முதல் நீதிபதி நியமனம்

(மன்னார் நிருபர்)

மன்னார் நீதிவான் நீதிமன்றத்தில் 7 வருடங்களாக சிறப்பாக சேவையாற்றிய சட்டத்தரணி அரியரட்ணம் வில்பிரட் அர்ஜுன் நீதிபதியாக நியமிக்கப்பட்டுள்ளார்.

எதிர்வரும் டிசெம்பர் முதலாம் திகதி தொடக்கம் இலங்கையின் நீதிச்சேவை ஆணைக்குழுவால் நீதிபதியாகக் கடமைகளைப் பொறுப்பேற்கவுள்ளார்.

மன்னார் புனித சவேரியார் ஆண்கள் கல்லூரியில் தனது பாடசாலை கல்வியைப் பெற்றுக் கொண்ட அர்ஜுன் மன்னார் மாவட்டத்தின் வரலாற்றில் முதலாவது இளம் வயது நீதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

அண்மையில் நீதிச்சேவை ஆணைக் குழுவால் நீதிபதிகளை உள்வாங்குவதற்கு என்று இடம்பெற்ற போட்டி பரீட்சையில் தேசிய ரீதியாக சித்தியடைந்ததுடன் 14 ஆவது நிலையை பெற்றுக் கொண்டார்.

நாடளாவிய ரீதியில் டிசெம்பர் மாதம் முதலாம் திகதி 25 பேர் நீதிபதிகளாகக் கடமைகளைப் பொறுப்பேற்க உள்ளமை குறிப்பிடத்தக்கது.

# திருமலை கட்டைப்பறிச்சானில் 200 தென்னங்கன்றுகள் வழங்கல்

(அஸ்ஹர் இப்றாஹிம்)

திருகோணமலை மாவட்டம் கட்டைப்பறிச்சான் தெற்கு, கட்டைப்பறிச்சான் வடக்கு, சேனையூர் ஆகிய கிராம உத்தியோகத்தர் பிரிவுகளில் உள்ள 50 குடும்பங்களுக்கு 200 தென்னங்கன்றுகள் வழங்கப்பட்டன.

'நாமே நமக்கு' அமைப்பின் நிதியுதவியுடன் மூதூர் லயன்ஸ் கழகத்தின் ஒருங்கிணைப்புடன் இந்தச் செயற்றிட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டது.

இந்த நிகழ்வில் 'நாமே நமக்கு' அமைப்பின் திருகோணமலை மாவட்ட இணைப்பாளர் அன்பு, மூதூர் யுனைட்டட் லயன்ஸ் கழகத் தலைவர் ஜே.எம்.இஹ்ஸான் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

இந்த நிகழ்வு சேனையூர் அனாமிகா கலை பண்பாட்டு மையத்தில் நடைபெற்றது.





# சாய்ந்தமருது அஷ்ரப் வித்திக்கு ஒரு லட்சம் ரூபா தளபாடங்கள்

**(யூ.கே. காலித்தீன்)**

சாய்ந்தமருது லீடர் அஷ்ரப் வித்தியாலயத்துக்கு ஒரு லட்சம் ரூபா பெறுமதியான கனிணி மேசைகளும் ஒரு தொகுதி பிளாஸ்டிக்

கதிரைகளையும் நாபீர் நிதியத்தால் வழங்கப்பட்டுள்ளன.

நிகழ்வானது வித்தியாலயத்தின் அதிபர் எம்.ஐ.எம். சம்சுதின் தலைமையில் இடம்பெற்றது. தவிசாளரும், பிரபல சமூக சேவை செயற்பாட்டாளரும், சமூக சேவை யாளருமான பொறியியலாளர் யூ.கே. நாபிர் அதிபரிடம் தளபாடங்களை வழங்கி வைத்தார்.

வித்தியாலயத்தின் அதிபர் சம்சுதீனின் வேண்டுகோளுக்கு இனங்க நீண்டகாலத் தேவையாக இருந்த கனிணி மேசைகளும் பிளாஸ்ரிக்



கதிரைகளும் வழங்கப்பட்டன.

அவருக்குப் பாடசாலை சமூகத்தால் வரவேற்பளித்ததோடு மனமார்ந்த நன்றிகளையும் தெரிவித்துக் கொள்கின்றனர்.

இதன்போது புலமைப் பரிசில் பரீட்சையில் சிறந்த அடைவு மட்டங்களை எட்டிய மாணவர்களுக்கு நினைவுச் சின்னங்களையும் 70 புள்ளிகளுக்கு மேல் பெற்ற மாணவர்களுக்கு சான்றிதழ்களும் வழங்கப்பட்டன.



# மாணவர்கள் கௌரவிப்பு!

**(அஸ்ஹர் இப்றாஹிம்)**

அம்பாறை மாவட்ட சதுரங்க சம்பியன்சிப் மற்றும் ஸஹிரியன் மாஸ்டர் சதுரங்க சம்பியன்சிப் போட்டிகளில் பங்குபற்றி வெற்றியீட்டிய கல்முனை அல் மிஸ்பாஹ் மாணவர்கள் பாராட்டி கௌரவிக்கப்பட்டுள்ளனர்.

அம்பாறை மாவட்ட சதுரங்க சம்பியன்சிப் போட்டியில் பங்கேற்று சம்பியனாக தெரிவு செய்யப்பட்ட எப்.பாத்திமா இல்மா,ஸஹிரியன் மாஸ்டர் சதுரங்க சம்பியன்சிப் போட்டியில் பங்கேற்று வெற்றியீட்டிய எம்.அனாஹித் ,எப்.பாத்திமா இல்மா ஆகிய மாணவர்களை பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வு பாடசாலை அதிபர் அப்துல் றஸாக் தலைமையில் அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பாடசாலை ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் கலந்து கொண்டனர்.



# கனமழையால் இயல்பு வாழ்க்கை பாதிப்பு: நீலகிரி மாவட்டத்தில் 68 வீடுகள் சேதம்



தமிழகத்தில் பெய்துவரும் கனமழை காரணமாக மக்களின் இயல்புவாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் வடகிழக்கு பருவமழை குறித்த முன்னேற்பாடு ஆலோசனைக் கூட்டம், நீலகிரி மாவட்டம் உதகையிலுள்ள தமிழகம் மாளிகையில் நேற்று நடைபெற்றது.

மாவட்ட ஆட்சியர் மு.அருணா முன்னிலையில் நடைபெற்ற இந்த கூட்டத்தில் சுற்றுலா துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன் தலைமைவகித்து பேசுகையில்,

"வடகிழக்குபருவமழை இந்த ஆண்டு 1-10-2023 முதல் 24-11-2023 வரை 397 மில்லி மீட்டர் இயல்பாக பெய்ய வேண்டும். ஆனால், இதுவரை 402 மில்லிமீற்றர் பெய்துள்ளது. இது இயல்பை விட ஒரு சதவீதம் அதிகம். 2022 ஆம் ஆண்டு 297 மில்லி மீற்றர் மழை பெய்தது.

இந்த ஆண்டு 402 மில்லி மீற்றர் பெய்துள்ளது. அதன்படி, கடந்த ஆண்டைவிட 35 சதவீதம் கூடுதலாக பெய்துள்ளது. நீலகிரி மாவட்டத்தில் 6 தாலுகாக்களில் துணை ஆட்சியர் அந்தஸ்தில் கண்காணிப்பு அலுவலர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர் பருவமழைக்கு இதுவரை ஒரு வீடு முழுமையாகவும், 68 வீடுகள் பகுதி அளவும் சேதமடைந்துள்ளன.

உறவினர்கள் யார் என்று தெரியாத நிலையில், மின்னல் தாக்கி இறந்த வட மாநிலத்தவரின் உடல், மருத்துவமனையில் பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளது" – என்றார்.

# 'முதலில் தமிழன், அடுத்துதான் இந்தியன்': பா.ம.க. தலைவர் அன்புமணி தெரிவிப்பு

"உலகில் எங்கு சென்றாலும் முதல் பெருமை நான் தமிழன். பெருமை மட்டுமல்ல, ஆணவம் இருக்க வேண்டும். அடுத்துதான் இந்தியன்."

– இவ்வாறு பா.ம.க. தலைவர் அன்புமணி ராமதாஸ் தெரிவித்துள்ளார்.

சென்னை உயர் நீதிமன்றத்தில் தமிழை வழக்காடு மொழியாக அறிவிக்க வேண்டும், சென்னை உயர் நீதிமன்றத்தை தமிழ்நாடு உயர்நீதிமன்றம் என பெயர் மாற்றம் செய்ய வேண்டும் ஆகிய இரு கோரிக்கைகளை முன்வைத்து உயர்நீதிமன்ற வழக்கறிஞர்கள் நடத்திய ஆர்ப்பாட்டத்தில் பா.ம.க. தலைவர் அன்புமணி ராமதாஸ் கலந்துகொண்டு உரையாற்றினார்.

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

"தமிழ்நாட்டிலேயே தமிழ் மெல்ல மறைந்து கொண்டிருக்கிறது. தமிழ்நாட்டில் தமிழை காப்பாற்ற வேண்டும் என்ற நிலைக்கு வந்துவிட்டோம்.

சென்னை உயர் நீதிமன்றத்தில் தமிழை வழக்காடு மொழியாக அறிவிக்க வேண்டும், சென்னை உயர் நீதிமன்றத்தை தமிழ்நாடு உயர் நீதிமன்றம் என பெயர் மாற்றம் செய்ய வேண்டும் என்பது நியாயமான கோரிக்கைகள். இந்த கோரிக்கையை நிறைவேற்ற பல நடவடிக்கைகளை தமிழகத்தை சார்ந்த அரசியல் கட்சிகள் எடுத்தனர். ஆனால் அது போதுமானது கிடையாது. 2006 இல் அன்றைய முதல்வர் கருணாநிதி சட்டமன்றத்தில் சென்னை உயர் நீதிமன்றத்தில் தமிழை வழக்காடு மொழியாக அறிவிக்க ஒரு தீர்மானம் கொண்டுவந்தார். அன்றைய ஜனாதிபதி அப்துல் கலாமை நேரில் சந்தித்து தீர்மானம் வலியுறுத்தவும் செய்தார்.



அரசியல் சாசன சட்டத்தில் 348 ஆவது பிரிவு 2 இல் உயர்நீதிமன்றத்தில் வழக்காடு மொழியை மாற்ற குடியரசு தலைவருக்கு அதிகாரம் உள்ளது. அந்த அடிப்படையில்தான் மத்திய பிரதேசம், உத்தர பிரதேசம், ராஜஸ்தான் ஆகிய மாநிலங்களில் இந்தியை அலுவல் மொழியாக அறிவித்தார்கள். அந்த அடிப்படையில் ஜனாதிபதி அப்துல் கலாம் அன்றைய சட்ட அமைச்சருக்கு இந்த பரிந்துரையை பரிசீலிக்க அனுப்பினார். அப்போது வேண்டுமென்றே சூழ்ச்சி செய்து அக்கோரிக்கையை நிறைவேற்றாமல் உச்ச நீதிமன்றத்துக்கு அனுப்பினார்கள். அப்போதைய உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி கே.ஜி.பாலகிருஷ்ணன், இக்கோரிக்கை முடியாது என்று நிராகரித்தார். இது தமிழுக்கு மட்டுமல்ல, சமூக நீதிக்கு பின்னடைவு. இதன்பின் 2016 ஆம் ஆண்டு முதல்வராக இருந்த ஜெயலலிதா தமிழை வழக்காடு மொழியாக மாற்ற சட்டமன்றத்தில் மீண்டும் தீர்மானம் நிறைவேற்றினார். அதுவும் கிடப்பில் போடப்பட்டது.

இந்தியாவில் தேசிய மொழி என்று எதுவும் கிடையாது. சிலர் தவறுதலாக இந்தி இருப்பதாக சொல்கிறார்கள். அது உண்மை இல்லை. உலகத்தில் பழமையான மொழிக்கு சொந்தக்காரர்கள் நாம். இந்த பெருமை வேறு யாருக்கும் கிடையாது. உலகில் எங்கு சென்றாலும் முதல் பெருமை நான் தமிழன். பெருமை மட்டுமல்ல, ஆணவம் இருக்க வேண்டும். அடுத்துதான் இந்தியன்." –என்றார்.

# 25 பணயக் கைதிகளை விடுவித்தது ஹமாஸ்!

## - தற்காலிக போர் நிறுத்தம் தொடங்கியது









இஸ்ரேல்- ஹமாஸ் ஒப்பந்தத்தின்படி முதற்கட்டமாக தாய்லாந்தை சேர்ந்த 12 பிணைக்கைதிகள் விடுதலை செய்யப்பட்டுள்ளனர் என சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

காசாவில் சிறை வைக்கப்பட்டிருந்த 12 பேர் விடுவிக்கப்பட்ட செய்தி அரசுக்கு கிடைத்துள்ளது என தாய்லாந்து பிரதமர் ஸ்ரெட்டா தவிசின் சமூக வலைதளத்தில் பதிவு செய்துள்ளார்.

இதனை தொடர்ந்து, இஸ்ரேலைச் சேர்ந்த 13 பிணைக்கைதிகளும் விடுவிக்கப்பட்டுள்ளனர் என அறிவிக்கப்பட்டுள்ளது. இதன்மூலம் முதற்கட்டமாக மொத்தம் 25 பிணைக்கைதிகள் விடுவிக்கப்பட்டுள்ளனர் என கூறப்படுகிறது.

தடுத்துவைத்துள்ள 7000 கைதிகளில் மேலும் 39 பேரை விடுதலை செய்ய இஸ்ரேல் முடிவு செய்யப்பட்டுள்ளது. அடுத்த 3 நாட்களில் 150 கைதிகளை விடுதலை செய்ய இஸ்ரேல் ஒப்பந்தம் செய்துள்ளது.

இஸ்ரேல் - ஹமாஸ் இடையே நீண்ட நாட்களாக போர் நடைபெற்று வருகிறது. இஸ்ரேலுக்குள் புகுந்த ஹமாஸ் அமைப்பினர் வெளிநாட்டினர் உள்பட 250 இற்கும் மேற்பட்டோரை பணயக் கைதிகளாக பிடித்து சென்றனர்.

இதற்கிடையே பணயக் கைதிகளை விடுவிப்பது தொடர்பாக பேச்சு நடைபெற்றது. இதில் கட்டார், எகிப்து, அமெரிக்கா ஆகிய நாடுகள் மத்தியஸ்தம் செய்தன.

இதில் பணயக் கைதிகளை விடுவிப்பதற்கு ஈடாக காசாவில் 4 நாட்களுக்கு போர் நிறுத்துவதாக இஸ்ரேல் அரசு அறிவித்தது. இந்த 4 நாள் போர் நிறுத்தத்தில் குழந்தைகள், பெண்கள் உட்பட 50 பிணைக்கைதிகளை ஹமாஸ் அமைப்பினர் விடுவிப்பார்கள் என்று தெரிவிக்கப்பட்டது.

# செங்கடலில் பயணித்த கப்பல் மீது தாக்குதல்: விமானங்களை சுட்டு வீழ்த்தியது அமெரிக்கா

செங்கடலில் பயணித்துக்கொண்டிருந்த அமெரிக்க போர்க்கப்பலை நெருங்கி வந்த பல தாக்குதல் ஆளில்லா விமானங்களை சுட்டு வீழ்த்தியுள்ளதாக அமெரிக்கா தெரிவித்துள்ளது.

யெமனில் உள்ள ஹவுதி பயங்கரவாத அமைப்பே ஆளில்லா விமானத் தாக்குதலை நடத்தியதாக அமெரிக்கா குறிப்பட்டுள்ளது.

அமெரிக்க போர்க்கப்பல் செங்கடலில் ரோந்துப் பணியில் ஈடுபட்டிருந்த போதே



இந்த ஆளில்லா விமானத் தாக்குதல் நடத்தப்பட்டதாகவும், ஆளில்லா விமானத் தாக்குதலால் கப்பலுக்கு எந்த பாதிப்பும் ஏற்படவில்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

செங்கடலில் ஹவுதி பயங்கரவாதிகளின் நடமாட்டம் அதிகரித்துள்ள நிலையில், சமீபத்தில் ஜப்பானிய சரக்குக் கப்பலை ஹவுதி பயங்கரவாதிகள் கடத்திச் சென்றனர்.

இந்த நிலையில் கடத்திச்செல்லப்பட்ட கப்பலையும் அதன் பணியாளர்களையும் உடனடியாக விடுவிக்குமாறு அமெரிக்கா கோரிக்கை விடுத்துள்ளது.